**புத்தளம் மாவட்டம் 18 கமநலசேவை குழுக்களின் - 2023**

---

## 1. கணக்காய்வு அபிப்பிராயம்

1.1 புத்தளம் மாவட்டத்தின் 18 கமநலசேவை குழுக்களின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க மற்றும் 2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டத்தின் பிரிவு 58(1) இன் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

1.2 2023 ஆண்டு தொடர்பான புத்தளம் மாவட்டத்தின் 18 கமநலசேவை குழுக்கள் தொடர்பான கணக்காய்வு அறிக்கை வெளியிடப்பட்டிருந்ததுடன் அந்த அறிக்கைகளில் முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்பட்டது. முனைப்பழிப்புள்ள அபிப்பிராயம் வெளியிடப்படுவதற்கு காரணமாக இருந்த பொருண்மையான வழுக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

### 1.3 நிதிக்கூற்றுக்கள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கமநல சேவைக் குழுக்கள் தொடர்பாக 24 ஏக்கர் 31 பர்சஸ் தரைக் காணியும் 18 மண் பரிசோதனை தொகுதிகளும், 12 களஞ்சியங்களும், 06 அலுவலகக் கட்டிடங்களும் 05 உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களும், ஒரு விதைக் களஞ்சியமும் மற்றும் இழைய வளர்ப்பு நிலையமுமாக நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | 06 கமநல சேவை நிலையங்களின் காணிகள் மற்றும் கட்டிடங்களை பெறுமதி மதிப்பீடு செய்யும் படி மாகாண விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது எனவும், ஏனைய நிலையங்களின் கட்டிடங்கள் அனைத்தையும் எதிர் காலத்தில் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதியல்லாத சொத்துக்களின் மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | இரண்டு கமநல சேவைக் குழுக்களின் ஏலவிற்பனை செய்து மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கு சாட்டப்பட்டிருந்த ரூபா 762,618 தொகை பெறுமதியான இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருக்கவில்லை. | 02 நெல் வெட்டும் இயந்திரங்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டு மற்றும் டிரக்டர் வண்டி ஒன்று கடதாசி கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், இயந்திர உபகரணங்கள் மற்றும் வாகனங்கள் நவகத்தேகம கமநல சேவைக் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது என. | கணக்குகள் சரி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 04 கமநல சேவைக் குழுக்களுக்காக காலநிலைக்கு ஏற்ற நீர்ப்பாசன செயற்திட்டங்களின் கீழ் 2022 ஆண்டின் போது கிடைத்திருந்த 08 களை பிடுங்கும் இயந்திரங்கள், 11 நெற்கன்றுகள் நடும் இயந்திரங்கள், 04 விதை நடும் இயந்திரங்கள் மற்றும் வெவ்கம் புபுதுவ செயற்திட்டத்தின் மூலம் கிடைத்திருந்த ஸ்மார்ட் தொலைக்காட்சி இயந்திரம் ஒன்று ஆக 28 நிதியல்லாத சொத்து விடயங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | CSIAP செயற்திட்டத்தின் மூலம் கமநல சேவை நிலையத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், அந்த செயற்திட்ட அலுவலகத்தில் இருந்து பெறுமதியினை பெற்றுக்கொண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிதியல்லாத சொத்துக்களின் மீதி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 04 கமநல சேவை குழுக்களில் 10 கணக்கு விடயங்கள் தொடர்பாக நிதிக் கூற்றுக்கள் மற்றும் நேரொத்த அறிக்கைகளிடையே மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,336,875 இற்கான வித்தியாசம் ஒன்று காணப்பட்டது. | அடுத்த ஆண்டு கணக்கரிக்கை தயாரிக்கும் போது சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | இணக்கமின்மை இணக்கம் செய்யப்பட வேண்டும். |

### 1.3.3 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| விரிவான பதிவுகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை, மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், கடன் பதிவேடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு, உரிமை சான்றிதழ்கள் மற்றும் கடன் கொடுத்தோர் காலப் பகுப்பாய்வு போன்ற சான்றுகள் காணப்படாமையால் 18 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 49,302,963 இற்கான 55 சொத்து விடயங்கள் மற்றும் கூட்டுத்தொகை ரூபா 22,913,124 இற்கான 16 பொறுப்பு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியாதிருந்தது. | விரிவான பதிவுகள், பெறுமதி மதிப்பீட்டு அறிக்கைகள், மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றிதழ்கள், கடன் பதிவேடு, நிலையான சொத்துக்கள் பதிவேடு, உரிமைச் சான்றிதழ்கள் சரி செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் மீதிகளை உறுதிப்படுத்துவதற்கு உரிய சான்றுகள் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| **(அ)** | **2000 இன் 46 ஆம் இலக்க கமநல அபிவிருத்தி சட்டம்**<br>பிரிவு 53(4) | ஒவ்வொரு 03 வருடங்களுக்கு ஒரு முறையும் விவசாயக் காணிப் பெயர் பதிவேடு திருத்தப்பட வேண்டியிருந்த போதிலும், 10 கமநல சேவை குழுக்களினால் அதன் படி செயற்பட்டிருக்கவில்லை. | கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் அறிவுரையின் படி நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்தின் ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | **இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின்**<br>நிதிப் பிரமாணம் 880 மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 இலக்கங் கொண்ட அரச நிதிச் சுற்றறிக்கையின் பகுதி II பிரிவு 09 | பணம் அல்லது இருப்பு தொடர்பாக செயற்படுவதற்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ள அனைத்து உத்தியோகத்தர்களினாலும் பிணை வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 17 கமநல சேவைக் குழுக்களின் விவசாய ஆய்வு மற்றும் உற்பத்தி உதவியாளர்கள் பிணை வைத்திருக்கவில்லை. | கமநல சேவை ஆணையாளர் நாகத்தின் இலக்கம் 7/2/15/3/3(vii) மற்றும் 2023 ஜனவரி 23 திகதிய கடிதத்தின் படி வி.ஆ.உ.உ. உத்தியோகத்தர்கள் பிணை வைப்பிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். | நிதிப் பிரமாணம் மற்றும் சுற்றறிக்கைகளுக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| **(இ)** | **கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கைகள்** | | | |
| (i) | 1994 மார்ச் 16 திகதிய 392/94 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | ஏனைய நிறுவனங்களில் இருந்து அல்லது நபர்களிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய பணம் தாமதமின்றி அறிவிடப்பட வேண்டியதுடன், 12 கமநல சேவைக் குழுக்களின் பல வருட காலம் முதல் காணப்படுகின்ற ரூபா 5,930,746 இற்கான மீதியொன்றினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | க.அ.ஆ.நாயகத்தின் 7/5/12/10/19 இலக்க மற்றும் 2024 ஏப்ரல் 26 திகதிய கடிதத்தின் படி ரூபா 481,794.63 இற்கான மீதியொன்று தற்போது அறவீடு செய்வதற்காக குழுக்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது எனவும், எதிர் காலத்தில் சுற்றறிக்கை அறிவுரையின் மீதியாக காணப்படுகின்ற மீதிகள் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி நடவடிக்கை எடுத்து நிலுவை மீதிகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) | 2012 பெப்ரவரி 29 ஆம் திகதிய 04/2012 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் | கமநல வங்கிகள் கமநல குழுக்களின் அலகொன்றாக காணப்படுவதனால் கமநல வங்கி தொடர்பான அனைத்துக் | தலைமை அலுவலகத்திலிருந்து அறிவுரை கிடைத்ததுடன், ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் | சுற்றறிக்கை அறிவுரைகளின் படி செயற்பட |

| | | | | |
|---|---|---|---|---|
| | பந்தி 5.6(i) | கணக்குகளும் கமநல சேவைக் குழுவின் வருடாந்த இறுதிக் கணக்குகளுக்கு உட்படுத்தி ஒன்றித்த நிதிக்கூற்றொன்று தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 18 கமநல சேவைக் குழுக்களினாலும் அவ்வாறு செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | வேண்டும். |
| (iii) | 2013 மார்ச் 08 திகதிய 04/2013 இலக்கம் கொண்ட சுற்றிக்கை | கமநல சேவை நிலையங்களின் வளாகங்களை பயன்படுத்தி விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல் தற்காலிக சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துதல், விவசாய அமைப்புக்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்தல் ஆகிய அலுவல்களை மேற்கொள்ளும் படி அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும், 17 கமநல சேவைக் குழுக்களினால் அவ்வாறு செயற்பட்டிருக்கவில்லை. | தற்போது 18 கமநல சேவை நிலையங்களில் சிந்திப்போம் மகளிர் விவசாய உற்பத்தி விற்பனை வாராந்த சந்தைகள் நடாத்துல், ஏல விற்பனை செய்தல், சந்தைகள் நடாத்துவதற்கு இடவசதியளிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கை அறிவுரையின் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iv) | 2020 ஒக்தோபர் 08 திகதிய 09/2020 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பந்தி 2.6.1 | அனைத்து பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்களினாலும் விவசாய அமைப்பின் சேமிப்புக் கணக்கொன்று கமநல சேவை அதிகார பிரதேசத்தின் கமநல வங்கி (முன்னோடி) செயற்திட்டத்தின் திறக்கப்பட்டு பேணிச் செல்லல் மற்றும் விவசாய அமைப்பின் அனைத்துக் கொடுக்கல் வாங்கல்களும் இந்த சேமிப்புக் கணக்கினூடாக மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும் 17 குழுக்களில் 638 பதிவு செய்யப்பட்ட விவசாய அமைப்புக்களில் 436 விவசாய அமைப்புக்களினால் ஏனைய வங்கிகளில் ரூபா 140,662,511 இற்கான பணம் வைப்புச் செய்யப்பட்டிருந்தது. | குறிப்பிட்ட அதிகாரப் பிரதேசத்தின் பிராந்திய அலுவலர்களினால் விவசாய அமைப்புக்களுக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்ததுடன், தற்போது பணம் வைப்பிடல் அதிகரிக்கப்பட்டுள்ளது என. | சுற்றறிக்கை அறிவுரையின் படி செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் படி 2023 ஆண்டில் 18 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 21,470,908 இற்கான தேறிய மிகையொன்றும், 18 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 13,505,619 இற்கான மிகையொன்றும் காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் 18 கமநல சேவைக் குழுக்களின் கூட்டுத்தொகை ரூபா 10,006,805 இற்கான தேறிய மிகையொன்றும், 18 கமநல வங்கிகளின் கூட்டுத்தொகை ரூபா 10,807,301 இற்கான மிகையொன்றும் காணப்பட்டது.

#### 2.1.1 பகுப்பாய்வு ரீதியான மீளாய்வு

i. மீளாய்வாண்டில் 16 கமநல சேவைக் குழுக்களில் ரூபா 22,010,149 தொகைக்கான மிகையொன்று காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டில் 16 கமநல சேவைக் குழுக்களின் மிகை ரூபா 10,311,610 தொகை காணப்பட்டமையால், ரூபா 11,698,539 இற்கான மிகையில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. மீளாய்வாண்டில் 02 குழுக்களின் பற்றாக்குறை ரூபா 539,241 தொகையாக காணப்பட்டதுடன், அதற்கொப்பாக முன்னைய ஆண்டில் 02 குழுக்களின் பற்றாக்குறை ரூபா 304,805 தொகை காணப்பட்டமையால் ரூபா 234,436 இற்கான பற்றாக்குறையில் அதிகரிப்பொன்று காணப்பட்டது.

ii. உரம், விவசாய இரசாயனப் பொருட்கள், விதைகள் மற்றும் கன்றுகள், விவசாய உபகரணங்கள் உட்பட விவசாய பண்டங்களை விற்பனை செய்தலாக காணப்படுவதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக 18 கமநல சேவைக் குழுக்களின் மொத்த விற்பனை வருமானக் கூட்டுத்தொகை ரூபா 149,936,017 தொகையும் முழு மொத்த இலாபத்தின் கூட்டுத்தொகை ரூபா 11,829,039 தொகையும் காணப்பட்டது. அதன்படி, 18 கமநல சேவைக் குழுக்களின் ஒட்டுமொத்த மொத்த இலாப விகிதாசாரம் 8 சதவீதமாக காணப்பட்டது.

iii. சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 18 கமநல சேவைக் குழுக்களின் நிதி நிலைமை தொடர்பாக தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| ➢ திரண்ட நிதியப் பெறுமதி (தேறிய சொத்துக்கள்) | = | 155,214,101 |
| ➢ நீண்ட கால கடன் பெறுமதி | = | 21,792,754 |
| ➢ நடைமுறைப் பொறுப்புக்கள் | = | 225,563,688 |
| ➢ மொத்தப் சொத்துக்கள் | | |
| • நடைமுறைச் சொத்துக்கள் | = | 284,970,282 |
| • நடைமுறை அல்லாத சொத்துக்கள் | = | 117,600,261 |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 மிகைப் பணம் முதலீடு செய்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 18 கமநல சேவைக் குழுக்களினால் மற்றும் 18 கமநல வங்கிகளினால் கூட்டுத்தொகை ரூபா 14,622,167 தொகையினை ஆக்கபூர்வமாக முதலீடு செய்யப்படாமல் 02 அரச வணிக | குழுக்களின் கொடுக்கல் வாங்கல் மற்றும் விவசாயிகளின் தேவைப்பாடுகளுக்காக கணக்குகளில் பணம் பேணிச் செல்லப்படுகின்றது என. | நிதியம் ஆக்கபூர்வமான முதலீட்டு வழிகளில் ஈடுபடுத்த வேண்டும். |

வங்கிகளின் நடைமுறைக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், கூட்டுத்தொகை ரூபா 47,613,091 இற்கான தொகையொன்று குறைந்த வட்டி வருமானம் கிடைக்கக்கூடிய சேமிப்பு வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, மிகைப் பணம் ஆக்கபூர்வமாக முதலீடு செய்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

## 3.2 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 18 கமநல சேவைக் குழுக்களினால் கணினி மென்பொருள் நிகழ்ச்சித் திட்டமொன்று செயற்படுத்துவதற்காக ரூபா 308,358 தொகை மற்றும் கமநல வங்கி உத்தியோகத்தர்களின் பயிற்சி வழங்களுக்காக ரூபா 183,042 தொகை மீளாய்வாண்டின் போது கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலகத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், அந்தச் செயற்திட்டம் இதுவரை செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தலைமை அலுவலகத்தின் வழிகாட்டலின் படி எதிர்காலத்தில் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதமின்றி செயற்திட்டங்கள் செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மாதம்பே கமநல சேவைக் குழுவின் 2009 ஆம் ஆண்டில் விற்பனைப் பிரிவில் கடமையாற்றிய பெண் விற்பனை ஊழியர் ஒருவரினால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி மோசடியின் காரணமாக அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 2,110,289 தொகையினை மீளாய்வாண்டு இறுதியளவிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அவதானிப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என. | நிதி மோசடி தொடர்பான பணம் பொறுப்புச் சொல்ல வேண்டிய தரப்பினரிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.3 செயற்பாட்டுத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தெரிவுப் பரிசோதனையின் படி 05 கமநல சேவைக் குழுக்களுக்கு சொந்தமான குளங்கள் மற்றும் கால்வாய்களை அளவை செய்து அதற்குரிய காணிப் பகுதிகளை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | புத்தளம் மாவட்டத்தில் 1651 சிறு நீர்ப்பாசன எண்ணிக்கையொன்று காணப்படுவதுடன், அவற்றில் நில அளவை அலுவல்கள் நிலஅளவையாளர் திணைக்களத்தினூடாக மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், | குழுக்களுக்கு சொந்தமான குளங்கள் மற்றும் கால்வாய்களை அளவை செய்து பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | மீதியான அளவை அலுவல்கள் திணைக்களத்தின் தகவல் முகாமைத்துவப் பிரிவினால் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது என. | |
| (ஆ) | புத்தளம் மாவட்டத்தில் கமநல சேவைக் குழுக்களினால் 2023 சிறு போகத்தின் விவசாய அலுவல்கள் 2023 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த போகத்திற்காக ரூபா 297,348,000 தொகை பெறுமதியான உர மானிய உறுதிச்சீட்டுக்கள் மாவட்ட கமநல அபிவிருத்தி அலுவலகத்தினால் 2023 ஜுன் மாதம் வழங்கப்பட்டிருந்தது. அதன்படி, உர மானிய உறுதிச்சீட்டுக்களின் கீழ் வழங்கப்பட்ட யூரியா மற்றும் MOP உரங்கள் விவசாய பணிப்பாளர் நாயகத்தின் பரிந்துரைகளுக்கு இணங்க குறிப்பிட்ட காலத்தில் பயன்படுத்த முடியாமல் போனமையால் உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட குறிக்கோள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. | எதிர் காலத்தில் இந்த பலவீனங்களை தவிர்த்துக்கொள்வதற்காக குறிப்பிட்ட உயர் பிரிவுகளை அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | எதிர்பார்த்த குறிக்கோளை நிறைவேற்றிக்கொள்ளக் கூடிய முறையில் குறிப்பிட்ட காலப் பகுதியில் மானிய நிகழ்ச்சித் திட்டங்கள் செயற்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | கமநல சேவை அதிகார பிரதேசத்தில் விளைச்சல் தொடர்பான தகவல் புள்ளிவிபரங்கள் விஞ்ஞான ரீதியாக விளைச்சல் கணிப்பீட்டின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களாக காணப்படாததுடன், அந்தந்த பிரிவிற்கு பொறுப்பான விவசாய ஆய்வு உற்பத்தி உதவி உத்தியோகத்தரினால் வழங்கப்படுகின்ற அண்ணளவான தகவல்கள் மீது தயாரிக்கப்பட்டிருந்தது. அதன்படி, அந்தத் தகவல்களின் நம்பகத் தன்மை குறைவாக இருந்தது. | புள்ளி விபரவியல் திணைக்களத்தின் பொறுப்பொன்றாக காணப்படுவதுடன், குறைபாடுகளை கணிப்பிடுவதற்காக வி.ஆ.உ.உ. மட்டத்தில் செயற்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உண்மையான தரவுகளின் அடிப்படையில் தகவல் அறிக்கைகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சேருகலே கமநல சேவைக் குழுவில் 2023 ஆண்டிற்குரிய ரூபா 84,080 தொகையும் மற்றும் 2022 ஆண்டிற்குரிய ரூபா 54,340 தொகையும் ராஜகந்தலுவ கமநல சேவைக் குழுவின் 2023 ஆண்டிற்காக ரூபா 48,670 தொகையும் ஏக்கர் வரி அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | இதில் ஒரு பகுதி 2024 ஆண்டு அறவிடப்பட்டதுடன், மீதித் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை ஏக்கர் வரி தாமதமின்றி அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மாவட்டத்தில் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பயிர் செய்யக்கூடிய A தர வயற் காணிகள் 265.87 ஏக்கர்களும், ஏனைய பயிர்கள் பயிர்ச் செய்யக்கூடிய B தர வயற் காணிகள் 873.27 ஏக்கர்களும், பயிர் செய்ய முடியாத C தர வயற் காணிகள் 960 ஏக்கர்களும் தரிசாக காணப்பட்டது. | பயிர் செய்யக் கூடிய வயற் காணிகளை பயிர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன், பயிர் செய்ய முடியாத வயல்கள் தரிசு நிலமாக காணப்படுகின்றது என. | வயற் காணிகளை வினைத்திறனுடன் பயிர் செய்கை அலுவல்களுக்காக பயன்படுத்த வேண்டும். |
| (ஊ) | 2 KR – 2006, 2008, 2010 செயற்திட்டத்தின் கீழ் ரூபா 250,000 வீதம் 93 கை டிரக்டர்களும், ரூபா 200,000 வீதப் 25 கை டிரக்டர்களுமாக மொத்தம் 118 கை டிரக்டர்கள் 118 விவசாயிகளுக்கு கடன் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 50 விவசாயிகளிடம் ரூபா 5,685,420 தொகையொன்று மேலும் அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. பணம் செலுத்தி முடிவடைந்திருந்த போதிலும் விவசாயிகளுக்கு உரிக்கப்பட்டிருக்காத 46 கை டிரக்டர்கள் காணப்பட்டன. திருத்த வேலை மேற்கொள்வதற்கு தேவையான உதிரிப் பாகங்கள் சந்தையில் காணப்படாமையால் அனேக டிரக்டர்கள் தற்போது விளைவற்று காணப்பட்டது. | 2024 ஜுலை 15 திகதிக்கு முன்னர் நிலுவை தொகையை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கும் படி பிராந்திய உத்தியோகத்தருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளதுடன், நிலுவைத் தொகை காணப்படும் டிரக்டர்களை மீண்டும் உரித்தாக்கி டென்டர் மூலம் விற்பனை செய்து குறிப்பிட்ட பணத்தை அறவீடு செய்வதற்கும், பணம் செலுத்தி முடிவடைந்திருந்த டிரக்டர்களை விவசாயிகளுக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை கடனை அறவீடு செய்வதற்கும், உரித்தாக்கியிருக்காத கை டிரக்டர்களை உரித்தாக்குவதற்கும், திருத்த வேலை மேற்கொள்வதற்கு தேவையான உதிரிப் பாகங்களை பெற்றுக்கொடுக்கும் வேலைத் திட்டமொன்று செயற்படுத்தலும் மேற்கொள்ள வேண்டும். |

## 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்கு உரிமை சாட்டப்பட்டிருந்த பாலகுடாவ கமநல சேவைக் குழுக் காணியில் 12 x 14 அடி அளவான இலத்திரனியல் தரவு தொலை தொடர்பு கம்பனியொன்று, செலுத்துகை வினியோக துணைக் கருவியொன்று நிர்மாணிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக கட்டணம் ஏதும் அரசிற்கு அல்லது கமநல சேவைக் குழுவிற்கு பெற்றிருக்கவில்லை. | கம்பனியிடம் விசாரணை மேற்ககொண்டு கடிதங்கள் அனுப்பும் படி நிலையப் பொறுப்பான உத்தியோகத்தருக்கு அறிவுருத்தப்பட்டதுடன், அதன்படி, அறவீடு தொடர்பான விடயங்கள் மேற்கொள்ளப்படும் என. | முறைப் பிரகாரம் குறிப்பிட்ட கம்பனியிடம் கட்டணம் அறவீடு செய்து அரச வருமானத்திற்கு செலவு வைக்க வேண்டும். |

### 3.5 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மாவட்டத்தில் 2021 ஆண்டில் சிறுபோகத்தில் விவசாயிகளுக்கு இலவசமாக வினியோகிப்பதற்காக கிடைத்திருந்த உர இருப்பில் TSP 3118 கிலோ கிராம் தொகை, ERP 5600 கிலோ கிராம் மற்றும் MOP 3078 கிலோ கிராம் இரண்டு குழுக்களில் 2022 சிறுபோகத்துக்குரிய நுசீ உரம் 9450 கிலோ கிராம் சேதன திரவ உரம் 843 லீற்றர்கள் திரவ உரம் 1780 லீற்றர், நயினமடம குழுவில் 2020 மற்றும் 2021 ஆண்டுகளின் போது கிடைத்திருந்த MOP 112 கிலோ கிராம் மற்றும் KCL 417 கிலோ கிராம், மதுரங்குளிய குழுவில் 2021/2022 பெறும் போகத்தில் வினியோகிப்பதற்காக கிடைத்திருந்த MOP 1527 கிலோ கிராம் பயன்படுத்தப்படாமல் களஞ்சியத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | எதிர் காலத்தில் கமநல அபிவிருத்தி ஆணையாளரின் அறிவுரையின் படி செயற்படுத்தப்படும் என. | குறிப்பிட்ட உர இருப்பினை காலவதியாவதற்கு முன்னர் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | 2012 ஆண்டின் போது வேல்ட் விஷன் நிறுவனத்தின் தலையீட்டுடன் நிர்மாணிக்கப்பட்டிருந்த இழைய வளர்ப்பு நிலையம் குறை பயன்பாட்டுடன் பேணிச் செல்வதுடன், 2012 ஆண்டு முதல் இதுவரை அதன் வருமானம் மற்றும் செலவினை இணக்கம் செய்த போது ரூபா 1,056,526 இற்கான நிதி விளைவுகளில் திரண்ட வீழ்ச்சியொன்று காட்டியிருந்தது. | இழைய வளர்ப்பு நிலையம் காலாண் பயிர் செய்கைக்காக தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என. | சொத்துக்கள் முழுமையாக பயன்படுத்துவதற்கு வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.6 செயற்திட்டங்கள் மற்றும் மூலதன வேலைகளில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| குடாவெவ கமநல சேவை நிலையத்தினால் மொத்த மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 3.5 மில்லியனிற்கான இ/ஹத்மிதி குளத்தின் வாண் மற்றும் கால்வாயின் பக்கச்சுவர் நிர்மாணிக்கும் செயற்திட்டம் செயற்படுத்தப்பட்டிருக்காததுடன், மல்வில குளம் மற்றும் ரால்மடுவ | குறிப்பிட்ட சிறிய நீர்ப்பாசன அபிவிருத்தி அலுவல்கள் மேற்கொள்ளும் வரை அந்தப் பணத்தை கமநல சேவைக் குழுவின் கணக்கில் வைப்புச் செய்யும் படி அறிவுரை வழங்கப்பட்டது. | நீர்ப்பாசன மறுசீரமைப்பு அலுவல்கள் உரிய காலத்தில் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

குளத்தின் மறுசீரமைப்பு அலுவல்களுக்காக 2022 ஆண்டின் போது வனாதவில்லுவ கமநல சேவைக் குழுவிற்கு ரூபா 300,864 தொகை கமநல அபிவிருத்தி மாவட்ட அலுவலத்தினால் வழங்கி இருந்த போதிலும், குறிப்பிட்ட மறுசீரமைப்பு அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 3.7 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 15 கமநல சேவைக் குழுக்களினால் 2006 பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 3.4 இணக்கமின்றி கூறுவிலை அழைக்கப்படாமல் நேர் கொள்வனவு என தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களிடம் விதை நெல், உரம், விவசாய உபகரணங்கள், விதைகள் மற்றும் காகிதாகிகள் முறையே ரூபா 6,110,025 தொகை, ரூபா 84,110,897 தொகை, ரூபா 183,850 தொகை, ரூபா 356,622 தொகை மற்றும் ரூபா 97,020 தொகைகளுக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | எதிர் காலத்தில் பெறுகை தத்துவங்களுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்படும். | அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் வழிகாட்டலுக்கு இணங்க கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 3.8 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| தாபனக் கோவையின் அத்தியாயம் III பந்தி 3.8.2 ஏற்பாடுகளின் படி திருப்திகரமான சேவையொன்றுக்கு வழிவகுக்கக்கூடிய விதத்தில் பொருத்தமான இடமாற்ற செய்முறையொன்று ஏற்படுத்தியிருக்க வேண்டியிருந்த போதிலும், 18 கமநல சேவைக் குழுக்களுக்கு இணைக்கப்பட்டிருந்த விவசாய ஆய்வு மற்றும் உதவி உத்தியோகத்தர்களின் வருடாந்த இடமாற்றக் கொள்கையின் படி இடமாற்றம் செய்யப்படாமையால் ஒரே சேவை நிலையத்தில் நீண்ட காலம் கடமையாற்றியிருந்தது. | எதிர் காலத்தில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கவனத்தில் கொண்டு வரப்படும் என. | முறையான இடமாற்றக் கொள்கையொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

**4. கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டு மதிப்பீட்டின் படி 18 கமநல சேவைக் குழுக்களின் 129 வருமானம் மற்றும் செலவு விடயங்கள் தொடர்பாக 0.33 சதவீதம் முதல் 1,531 வரையான வீச்சில் முரண்கள் காணப்பட்டது. அதன் காரணமாக கட்டுப்பாட்டுச் செய்முறையொன்றாக பயன்படுத்தப்படும் பாதீடு குழுவினால் ஆக்கபூர்வமான கட்டுப்பாட்டு உபாயமொன்றாக பயன்படுத்தியிருக்கவில்லை. | 2024 ஆண்டின் போது சரியான மதிப்பீடொன்று தயாரிப்பதற்கு அறிவுரை வழங்கப்பட்டு தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என. | மதிப்பீடுகள் சரியாக தயாரிப்பதற்கும் அதன்படி செலவுகளை கட்டுப்படுத்தலும் மேற்கொள்ளப்பட வேண்டும். |

**5 கமநல வங்கிகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கமநல வங்கிகள் நிறுவியது முதல் இதுவரை முன்னோடிச் செயற்திட்டமொன்றாக காணப்படுகின்றதுடன், அது தேசிய ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையான வங்கி முறைமையொன்றென ஒழுங்குறுத்தக்கூடிய வகையில் அபிவிருத்தி செய்வதற்கு தேவையான கோறிக்கைகள் கமநல சேவைக் குழுவினால் கமநல அபிவிருத்தி ஆணையாளருக்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | எதிர் காலத்தில் கமநல அபிவிருத்தி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு கொண்டு வரப்படும். | கமநல வங்கி ஏற்றுக்கொள்ளப்பட்ட வங்கி முறைமை ஒன்றென ஒழுங்குறுத்தல் மேற்கொள்வதற்கு தேவையான கோறிக்கை விடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மாதம்பே கமநல வங்கியினால் வாரி திரிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் 2021 செப்தம்பர் 27 திகதி விவசாய அமைப்பொன்றுக்கு வழங்கியிருந்த ரூபா 1,000,000 இற்கான முற்பணத் தொகை நிர்மாண வேலையின் பின்னர் மாவட்ட அலுவலகத்தினால் பில் பத்திரங்கள் தீர்க்கும் போது கழித்திருக்காமையால் 2024 ஜனவரி 02 திகதி தடுத்து வைத்தல் பணம் எதிரீடு செய்த பின்னர் மேலும் ரூபா 428,102 தொகையொன்று அறவீடு செய்ய முடியாமல் இருந்தது. | புத்தளம் மாவட்ட கமநல தீர்ப்பு மன்றுக்கு இந்தக் கடனை அறவீடு செய்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என. | நிலுவைத் தொகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 06 கமநல சேவைக் குழுக்களினால் 2020 ஆண்டு முதல் 2023 ஆண்டு வரை விவசாயிகளுக்கு வழங்கப்பட்டிருந்த கூட்டுப்பெறுமதி ரூபா 8,755,000 இற்கான 67 செயற்திட்ட மற்றும் தொழில் முயற்சியாளர் கடன் தொகைகளில் முன்னேற்றத்தை பரிசோதனை செய்த போது 31 செயற்திட்டங்கள் கணக்காய்வுத் திகதி வரை ஆரம்பிக்கப்பட்டிருக்காததுடன், 13 செயற்திட்டங்களின் பௌதீக முன்னேற்றம் 50 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. அதன்படி, கடன் வழங்கிய பின்னர் தொடர் நடவடிக்கை முறை ஒன்று எடுக்கப்படாததுடன், செயற்திட்டங்களை செயற்படுத்தும் போது வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பாக அறிக்கைகள் பேணி வருவதற்காக விவசாயிகளுக்கு வழிகாட்டலொன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. | குறிப்பிட்ட பிராந்திய உத்தியோகத்தர்களுக்கு தொடர் நடவடிக்கை எடுக்கும் படி எழுத்துமூலம் அறிவிக்கப்பட்டதுடன், கடன் தவணைகளை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கும் படியும் அறிவிக்கப்பட்டது என. | கடன் வழங்கிய பின்னர் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு மற்றும் அறிவுரை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மாவட்டத்தில் 17 கமநல சேவைக் குழுக்களில் 485 பிரிவுகளுக்காக பயிர் செய்கைக் கடன், செயற்திட்டக் கடன், தொழில் முயற்சிக் கடன் மற்றும் ஏனைய கடன் வழங்குதலை பரிசோதனை செய்த போது 260 பிரிவுகள் அதாவது 53 சதவீதத்திற்கு எதுவித கடன் தொகையும் வழங்கியிருக்கவில்லை. | 2024 ஆண்டில் மாவட்டத்தில் அனைத்து பிரிவுகளுக்கும் கடன் செய்முறை செயற்படுத்தப்பட்டு கடன் வழங்குவதற்கும், அவர்களின் வருமானத்தை அதிகரிப்பதற்கும் தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அனைத்து பிரிவுகளும் அடங்கக்கூடியவாறு கடன்கள் வழங்கப்பட வேண்டும். |
| (உ) | 18 கமநல சேவைக் குழுக்களின் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 1471 விவசாயிகளுக்கு வழங்கியிருந்த விவசாயக் கடன், செயற்திட்டக் கடன், தொழில் முயற்சிக் கடன் மற்றும் ஏனைய கடன்களின் கூட்டுத்தொகை ரூபா 55,368,217 தொகை 6 மாதங்களுக்கும் 20 வருடங்களுக்கும் மிகையான காலம் கால தாமதம் அடைந்துள்ள நிலுவைக் கடன் மீதியொன்று அறவீடு செய்திருக்கவில்லை. | காலம் கடந்துள்ள நிலுவை கடனை அறவீடு செய்வதற்கு மாவட்ட கமநல நடுவர் மன்றுக்கு மற்றும் நீதிவான் நீதிமன்றுக்கு இந்த நிலுவைக் கடன்பட்டோரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவைக் கடன்மீதிகளை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |